# பாவை - பள்ளியெழுச்சி ஒப்பீடு

சு.ஜெயசித்ரா,
**முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவி,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.**

DOI 10.5281/zenodo.14783743.

**Abstract :**

**In the history of Tamil literature, the Bhakti literary period was an important golden age for the Azhwars and Nayanmars to spread the religion of God to everyone. During this period, Andal Nachiyar, the only female Azhwar among the 12 Azhwars, and Manickavasagar, one of the four Saiva Samaya Kuravars, created the literary genre called Paavai as a garland for the Lord. Thondaradi Podiyazhwar rose to the occasion and sang. To the audience. Manickavasagar also rose to the occasion and sang for Annamalaiyar. It can be assumed that Andal composed Thirupavai with the letter *Ma* as the first letter, 'Margazhithingal', and Manickavasagar composed Thiruvambavai with the letter *A* as the first letter, 'Adhiyum Andhamum', to the audience. In this perspective, the aim of this article is to compare the devotees who wrote the songs on the heroine's sin, compare their literary genres, and compare and examine the beautiful songs that we can all sing in the early morning, which are the great literature of Saiva Vaishnava.**

**Key Words : Comparative literature - Saivam - Vainavam - Paavai Paadalgal**

**முன்னுரை :**

தமிழ் இலக்கிய வரலாற்றிலே பக்தி இலக்கியக் காலம் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் இறைமார்க்கத்தை அனைவரிடமும் கொண்டு செலுத்த ஒரு முக்கியமான பொற்காலமாக இருந்தது .இந்தக் காலத்திலே 12 ஆழ்வார்களுள் ஒரே பெண் ஆழ்வாராக விளங்கும் ஆண்டாள் நாச்சியாரும் ,சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகரும் பாவை என்னும் இலக்கிய வகையினை இறைவனுக்கு மாலையாகச் சூட்டினர் . தொண்டரடிப் பொடியாழ்வார் பள்ளியெழுச்சி பாடினார். அரங்கனுக்கு . மாணிக்கவாசகரும் பள்ளியெழுச்சி பாடினார் அண்ணாமலையாருக்கு. மாணிக்கவாசகரைக் குறிப்பதற்காகவோ என்னவோ **'மார்கழித்திங்கள்'** என்று *மா* என்ற எழுத்தை முதலாகக் கொண்டு ஆண்டாள் திருப்பாவையையும் , **'ஆதியும் அந்தமும்'** என்று *ஆ* என்ற எழுத்தை முதலாகக் கொண்டு ஆண்டாளைக் குறிப்பதற்காகவோ என்னவோ மாணிக்கவாசகர் திருவம்பாவையையும் இயற்றியுள்ளார் என்றும் கருதலாம் . இத்தகைய நோக்கிலே நாயகி பாவத்திலே பாடல்களை எழுதிய அடியவர்களை ஒப்பிட்டு ,அவர்களது இலக்கிய வகைகளையும் ஒப்பிட்டு ,சைவ வைணவ இறவாப் பேரிலக்கியமாகத் திகழும் அதிகாலையில் நாம் அனைவரும் போற்றிப்பாடக் கூடிய அருமையான பாடல்களாக விளங்கும் , பாவை, பள்ளியெழுச்சியை ஒப்பிட்டு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

**சைவ - வைணவ அருமறை:**

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமய அடியவர்கள் எழுதிய பன்னிரு திருமுறைகளுள் மாணிக்கவாசகர் இயற்றிய எட்டாம் திருமுறையில் திருவெம்பாவையும்



http://Creativecommons.org//license/by/4.0/.

திருப்பள்ளிஎழுச்சியும் இடம்பெற்றுள்ளது . திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடக்கூடிய வைணவ சமயத்திலே நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்னும் வகைமையிலே ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவையும் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருப்பள்ளி எழுச்சியும் இடம்பெற்றுள்ளது.

திருப்பாவை 30 பாசுரங்களைக்கொண்டது. திருவெம்பாவை 20 பதிகங்களைக்கொண்டது.தொண்டரடிப் பொடியாழ்வார் இயற்றிய திருப்பள்ளியெழுச்சி பத்து பாசுரங்களையும், மாணிக்கவாசகர் இயற்றிய திருப்பள்ளி எழுச்சி 10 பதிகங்களையும் கொண்டுள்ளது.

**பாவை, பள்ளியெழுச்சி விளக்கம்:**

பொதுவாகப் பாவை என்பது பெண் என்ற பொருண்மையில் அமையும் . பாவைக்கூத்து நம்முடைய இலக்கிய மரபிலே இருந்துள்ளது . இந்தப் பாவை என்பது பெண்கள் இறைவனைப் போன்ற குணங்கள் பொருந்திய ஒருவன் தனக்கு மணவாளனாக அமைய வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளும் நோன்பு ஆகும் .இந்தப் பாவை நோன்பை எப்படி மேற்கொள்ள வேண்டும் ? இந்த நோன்பினை மேற்கொள்ளும் பொழுது செய்யத்தகாதவை என்னென்ன ? என்பதை எல்லாம் சில விதிமுறைகளோடு தங்களுடைய பாடல்களிலே இறையடியவர்கள் அருளிச் செய்துள்ளனர் . ஆண்டாள் கண்ணனை மணவாளனாக அடைய வேண்டும் என்பதற்காகப் பாவைநோன்பினை மேற்கொண்டாள். மாணிக்கவாசகர் சிவபெருமானைக் கணவனாக அடைய வேண்டும் என்பதைத் தன்னை ஒரு பெண்ணாகப் பாவித்துத் திருவம்பாவையாகப் பாடி ,பாவை நோன்பினை மேற்கொண்டுள்ளார். இந்தப் பாவை பாடல்களை மார்கழி மாதம் அதிகாலையில் நான்கு -ஆறு என்று கூறப்படும் பிரம்மமுகூர்த்த நேரத்திலே துயில் எழுந்து , நீராடி, கோவிலுக்குச் சென்று, இந்தப் பாடல்களைப் பாடி வழிபடுபவர்களுக்கு இறையருள் கிடைக்கும் என்பது காலங்காலமாக நம்பப்பட்டு வருகிறது.

பாவை பாடல்களிலே வீடுவீடாகச் சென்று தோழிகளைத் துயில் எழுப்பி அவர்களையும் கோவிலுக்கு அழைத்துச் செல்லும் முறைமையும் காணப்படுகிறது.

**' யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'**

என்ற நோக்கிலே ஆழ்வார்களும் நாயன்மார்களும் இருந்துள்ளனர் என்பது இதன் மூலம் புலப்படுகிறது.

பாவையாவது மனிதர்களைத் துயில் எழுப்புவதையும் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது . ஆனால், பள்ளியெழுச்சி இறைவனே துயில் எழுப்புவதற்காகப் பாடப்படுவது . தொண்டரடிப் பொடியாழ்வார் மாலை சாற்றும் கைங்கரியத்துடன் சேர்த்துப் பூமாலையுடன் பாமாலையையும் பள்ளியெழுச்சியாகப் பாடியவர். காலைப் பொழுதினை வருணித்து இறைவனைத் துயில் எழுமாறு பாடுவது திருப்பள்ளிஎழுச்சி . இன்றும் எல்லா ஆலயங்களிலும் இந்தத் திருப்பள்ளியெழுச்சி காலையிலே பாடப்படுகிறது. மாணிக்கவாசகரும் சிவபெருமானைத் திருப்பள்ளிஎழுச்சி பாடித் துயில் எழச் செய்கிறார் .எல்லாக் கோவில்களிலுமே இரவில் பள்ளியறை பூஜையும் அதிகாலையில் திருப்பள்ளிஎழுச்சி பூஜையும் நடைபெறுவதை இன்றும் காணலாம். அத்தகைய சமயங்களில் பாவை,


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

பள்ளியெழுச்சி பாடல்களே பெரும்பாலும் பாடப்படுகின்றன . பள்ளியெழுச்சிப் பாடல்கள் எல்லா நாட்களிலும் பாடப்படும்.

**திருப்பாவை, திருவெம்பாவை ஒப்பீடு:**

திருப்பாவை, திருவெம்பாவை இரண்டுமே பெண்கள் மேற்கொள்ளும் பாவைநோன்பு . இறைவனின் சிறப்புகளைப் பாடுவதனால் 'திரு' என்னும் அடைமொழி பெற்று இந்நூல்கள் விளங்குகின்றன.

**மழைப்பொழிவு :**

திருப்பாவையிலே நான்காவது பாசுரத்தில் ,

**"ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்"**

என்று மழை எப்படியெல்லாம் பெய்யும் என்ற நிகழ்வுகளை எல்லாம் ஆண்டாள் நாச்சியார் படம்பிடித்துக் காட்டுவது போலப் பதிவு செய்திருக்கிறார் . மின்னல் ,இடி இவற்றிற்கெல்லாம் சார்ங்கத்தையும்(வில்) சங்கினையும் (பாஞ்சசன்னியம்) உவமையாகக் கூறி மழை பெய்யும் வானியல் நிகழ்வினை விளக்குகிறார் ஆண்டாள் நாச்சியார்.

இதைப் போலவே திருவெம்பாவையிலும் 16-ஆவது பதிகத்தில்,

**"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்**

**என்னத் திகழ்ந் தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்"**

என்று மாணிக்கவாசகர் மழைபெய்யும் நிகழ்வினை மிக அழகாகப் பதிவு செய்துள்ளார் . இதிலிருந்து நம் முன்னோர்கள் வானியல் அறிவு பெற்றுத் திகழ்ந்தனர் என்பது நமக்குப் புலனாகிறது.

**இறைவனை அறிமுகப்படுத்துதல்:**

ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை முதல் பாசுரத்தில்,

**"கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்**
**ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்"**

என்று யசோதை நந்தகோபரின் மகனாக வளர்ந்த கிருஷ்ணபரமாத்மாவை அறிமுகம் செய்கிறார். மாணிக்கவாசகரோ தன்னுடைய முதல் பதிகத்திலே,

**"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி"**

என்று **"பிறவா யாக்கைப் பெரியோன்"** ஆகிய சிவபெருமானை அடையாளப்படுத்துகிறார்.

**போற்றி வாழ்த்துதல்:**

திருப்பாவையிலே 24-ஆவது பாசுரத்தில் திருமாலின் அவதாரச் சிறப்புகளை எல்லாம் கூறி ,

**"அன்று இவ்உலகம் அளந்தாய் அடிபோற்றி**
**சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி**
**பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி**
**குன்று குடையாய் எடுத்தாய் குணம்போற்றி**
**வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி "**

என்று போற்றிப் பாடி வாழ்த்துகிறார் ஆண்டார் நாச்சியார்.

மாணிக்கவாசகர் தன்னுடைய திருவெம்பாவை 20-ஆவது பதிகத்திலே நிறைவாக,

**"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்குழல்கள்**
**போற்றிய எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்**
**போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம் "**

என்று சிவபெருமானைப் போற்றி வாழ்த்துவதைக் காணலாம்.

**தோழிகளைத் துயில் எழுப்புதல்:**

திருப்பாவையிலே ஆறாவது பாசுரத்தில், **"பிள்ளாய்! எழுந்திராய்"** என்று தொடங்கி 15-ஆவது பாசுரத்தில் **"எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ !"** என்ற பாடல் வரை ஆண்டாள் நாச்சியார் தன் தோழிகளைத் துயில் எழுப்புவதைக் காணலாம்.

திருவெம்பாவையில் முதல் பதிகத்தில் **"மாதே வளருதியோ ?"** என்று தொடங்கி எட்டாவது பதிகத்திலே, **"வாழியீ தென்ன உறக்கமோ ? வாய் திறவாய் "** என்ற பாடல் வரை தோழிகளைத் துயில் எழுப்புகிறார் மாணிக்கவாசகர்.

**மார்கழி நீராட்டச் சிறப்பு:**

ஆண்டாள் நாச்சியார் தன்னுடைய முதல் பாசுரத்திலே ,**"நீராடப் போதுவீர் "** என்று துவங்கி ,நான்காவது பாசுரத்தில் ,**"வாழ உலகினில் பெய்திடாய் ! நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"** என்றும்,

இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்விக்க வேண்டி ," **உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை இப்போதே எம்மை நீராட்டேலோ"** என்றும் பாடியுள்ளமையைக் காண்கிறோம்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவையிலே, பதினோராவது பதிகத்தில் இறைவன் நீராடியதை ,**"வெண்ணீறாடி செல்வா !"** என்று குறிப்பிட்டு , பன்னிரண்டாவது பதிகத்தில் ,**"ஏத்தி இருஞ்சுனை நீர்ஆடேலோர் எம்பாவாய்"** என்றும், 13 மற்றும் 17-ஆவது பாடலில், **" பங்கயப் பூம்புனல் பாய்ந்தா டேலோர் எம்பாவாய் "** என்றும், 15- ஆவது பாடலில், **"ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்"** என்றும் ,18-ஆவது பாடலில் **"பெண்ணே! இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்"** என்றும் நீராட்டுச் சிறப்பினைப் பாடியுள்ளமையைக் காண்கிறோம்.

**சரணாகதி மார்க்கம்:**

ஆண்டாள் நாச்சியாரின் பாசுரங்களிலே,


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**"என்றென்றும் உன்சேவகமே ஏத்திப்பறை கொள்வான்"**-24,

**"எற்றைக்கும் ஏழேல் பிறவிக்கும் உந்தன்னோடு**
**உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்"**-29

என்று இறைவனைச் சரணாகதி அடைவதைக் காணலாம்.
மாணிக்கவாசகரின் பாடலிலே,

**"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்"**-9,
**"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று"**-19

என்பதாக மாணிக்கவாசகர் வீடுபேறு அடையும் வழி தேடுவதை இங்கு அறிகிறோம்.

**பாவையிலே ஒப்புமைச் சொல்லாட்சியும் அணிகலன்களும்:**

மாணிக்கவாசகர் நான்காவது பாடலில், **"வண்ணக்கிளி மொழியார்"** என்கிறார்.

ஆண்டாள் நாச்சியார் **"எல்லே இளங்கிளியே"** என்கிறார்.

திருவெம்பாவை 14-ஆவதுபதிகத்தில், **"காதார் குழையாட பைம்பூண் கலனாடக் கோதை குழலாட"** என்று அணிகலன்களை வரிசைப்படுத்துகிறார்.

ஆண்டாள் நாச்சியார் 27-ஆவது பாசுரத்தில் , **"சூடகமே தோல்வளையே தோடே செவிப் பூவே பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம் "** என்று அணிகலன்களை வகைப்படுத்துவதைக் காணலாம்.

**திருப்பள்ளிஎழுச்சி ஒப்பீடு:**

இறைவனைத் துயில் எழுப்புவதாக அமையும் இந்தத் திருப்பள்ளிஎழுச்சி எல்லாச் சைவ - வைணவக் கோவில்களிலும் அதிகாலையில் பாடப்படும்.

**இறைவனின் திருநாமங்களைச் சொல்லுதல்:**

தொண்டரடிப் பொடியாழ்வார் 10 பாசுரங்களிலும்

**"அரங்கத் தம் மா பள்ளி எழுந்தருளாயே!"**

என்று இறைவனைத் துயில் எழுப்புகிறார்.

மாணிக்கவாசகர் **"எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே "**, **"அலைகடலே பள்ளி எழுந்தருளாயே"** **"ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே"** என்று இறைவனைத் துயில் எழுப்புகிறார்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையுறை சிவபெருமானை எல்லாப் பதிகங்களிலும் பாடுவதைக் காணலாம்.

**பொழுது புலர்தலை வருணித்தல்:**

தொண்டரடிப்பொடியாழ்வார்முதல்பாசுரத்திலே,


http://Creativecommons.org//license/by/4.0/.

**"கதிரவன் குணாதிசைச் சிகரம் வந்து அணைந்தான்**

**கனை இருள் அகன்றது காலையம் பொழுதாய்"**

என்று கதிரவனின் வருகையைச் சுட்டுகிறார்.

மாணிக்கவாசகர்

**"அருணன் இந்திரன் திசைஅணுகினன் இருள்போய் அகன்றது உதயம்"**

என்று பொழுது புலர்ந்ததை வருணித்துப் பாடுகிறார்.

**பறவைகளின் ஒலி:**

தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரத்திலே, **"புலம்பின புட்களும்"**5,

என்று பறவைகளின் ஒலியைக் குறிப்பிடுகிறார்.

மாணிக்கவாசகர் **"கூவின பூங்குயில்** "3, என்று பறவைகள் பொழுது புலர்ந்ததாக ஒலி எழுப்புவதைப் பதிவு செய்கிறார்.

**இன்னிசைக் கருவிகளுடன் காத்திருப்போர் :**

இறைவனைத் துயில் எழுப்புவதற்காகப் பல்வேறு இசைக்கருவிகளுடன் தேவர்களே காத்திருப்பதாகப் பதிவு செய்யும் அடியவர்கள் , அவற்றைத் தன் பாடல் வரிகளிலே மதுரச்சுவையுடன் எடுத்தியம்புகின்றனர்.

**"ஏதமில் தண்ணுமை யெக்கம்மத்தளி**
**யாழ்குழல் முழவமோ டிசைதிசைகெழுமி**
**கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்**
**கந்தருவர் அவர் கங்குலு ளெல்லாம்"**

என்று ஒன்பதாவது பாசுரத்திலே பாடுகிறார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

**"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்**
**இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்"**

என்று நான்காவது பதிகத்திலே பாடுகிறார் மாணிக்கவாசகர்.

**தொகுப்புரை:**

திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளிஎழுச்சி போன்ற பக்தி இலக்கியக் கால நூல்கள் தைப்பாவை, பாரத மாதா திருப்பள்ளிஎழுச்சி போன்ற பல நூல்கள் பிற்காலத்தில் தோன்றுவதற்கு ஒரு முன் உதாரணமாக இருந்துள்ளன . பாவை நோன்பு மனிதர்களுக்குத் தேவையான கட்டுப்பாட்டையும், இறைவனின் சிறப்புகளையும் , இறைவனை வழிபடும் முறையினையும் மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றன . பள்ளியெழுச்சிப் பாடல்களும் அதிகாலையில் துயில்எழுந்து இறைவனை வழிபட்டு அவன் அருள் பெறுவதற்கான வழியினை நமக்கு இயம்புகின்றன. இத்தகைய பாசுரங்களையும் பதிகங்களையும் பாடி மார்கழி மாதம் தூய்மையான ஆக்சிஜன் காற்றைச்


http://Creativecommons.org//license/by/4.0/.

சுவாசித்து அதிகாலையில் துயில் எழுந்து நம்முடைய நினைவாற்றலை மேம்படுத்தி வாழ்வில் எல்லா நலமும் வளமும் பெற்று வாழப் பாவை , பள்ளியெழுச்சி நூல்கள் நமக்குப் பேருதவி புரிகின்றன. ஆழ்வார்-நாயன்மார்களை ஒப்பிட்டுப் பார்க்கையிலே அவர்களுடைய பாசுரங்களும் பதிகங்களும் பல ஒற்றுமைகளையும் பல வேற்றுமைகளையும் கொண்டிருந்தாலும் பரம்பொருளைச் சேரும் மார்க்கத்தினை நமக்கு இயம்புகின்றன . அவர்களின் வழியில் நாமும் இறையருள் பெற்று நலமோடு வாழ்வோம்.

---

**துணை நின்ற நூல்கள்;**


- திருப்பாவை-சி.சுப்பிரமணியன்-கௌரா பதிப்பகம்.
- திருவெம்பாவை-சி.பாலசுப்பிரமணியன்-நறுமலர்ப்பதிப்பகம்,சென்னை.
- திருப்பள்ளியெழுச்சி-ரா.சண்முகசுந்தரம் செட்டியவர்-சைவ சித்தாந்த மகா சமாஜம்,சென்னை.
- திருப்பள்ளியெழுச்சி,திருமாலை-அருள்மிகு அம்மன் பதிப்பகம் வெளியீடு.



http://Creativecommons.org//license/by/4.0/.